மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய நூலகங்களுக்கு ராஜா ராம் மோகன் ராய் நூலகக் குழு மூலம் உதவி கிடைப்பது என்பது ஒரு சில சந்தர்ப்பங்களிலே தருகிறார்கள். அது தவிர மற்றபடி நம்முடைய நூலகங்கள் எல்லாம் நம்முடைய நிதி ஆதாரத்தின் பேரிலேதான் நடைபெற்று வருகின்றன. அதற்காக சொத்து வரியிலே நாம் தனியாக ஒரு நூலக வரி என்று போட்டு வசூலித்து, அந்தப் பணத்தை வைத்துக் கொண்டு தான் மாவட்ட நூலகங்கள் எல்லாம் நடத்தி நூலகக் குழுவையும் அமைக்கின்றன, நூல்கள் வாங்குகின்றன, மற்ற பராமரிப்பு எல்லாம் செய்து கொண்டிருக்கின்றன. ஆகவே அந்த அடிப்படையில் ராமநாதபுரம் மாவட்டத்திலே இயங்குகின்ற நூலக குழுவும் இந்த அரசினுடைய நிதி ஆதாரத்தின் பேரிலே தான் நடைபெற்று வருகின்றன.

டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமங்களில் பகுதி நேர நூலகங்கள் ஆரம்பிக்கும்போது இந்த உதவியுடன் ஆரம்பிக்க அமைச்சர் அவர்கள் முன் வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பகுதி நேர நூலகம் ஆரம்பிப்பதற்கான திட்டம் அரசிடம் ஏற்கனவே இருக்கிறது. அதற்கான நிபந்தனைகளை பூர்த்தி செய்து குறிப்பிட்ட ஊரிலே ஒன்று ஆரம்பிக்க வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கொடுப்பார்களேயானால் அது பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 425, திரு. ப. ரங்கநாதன், இருக்கையில் இல்லை.

வினா எண். 426, திரு. ஏ. ரவிக்குமார், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

426—

டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக் கழகம் அமைக்கும் பணி.

* 15993—திரு. ஏ. ரவிக்குமார் :

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) பொன்னேரி தொகுதியில், சோழவரம் பஞ்சாயத்து யூனியனில் ஆத்தூர் கிராமத்தில் டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக் கழகம் அமைக்கும் பணி தொடங்கப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது பணி தொடங்கப்பட்டது ?

<u>மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்</u> : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

<u>திரு. ஏ. ரவிக்குமார்</u> : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியில் சோழவரம் பஞ்சாயத்து யூனியனில் ஆத்தூர் கிராமத்தில் முன்னாள் முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்களுடைய பெயரால் ஏற்படுத்தப்பட்ட டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக் கழகத்தை அமைப்பதற்காக இடத்தைத் தேர்வு செய்தார்கள். பல்வேறு அதிகாரிகள் பார்வையிட்டு சர்வே செய்தார்கள். ஆனால் அதற்கானப் பணி இதுவரையில் தொடங்கப்படவில்லை. வேறு ஏதாவது இடத்தைத் தேர்வு செய்தார்களா? அல்லது அந்தப் பணி வேறு இடத்திற்கு மாற்றப்பட்டு விட்டதா என்று அறிய விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு திரு. சு. முத்துசாமி</u> : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக் கழகத்தினுடைய அட்மினிஸ்டிரேடிவ் பிளாக்கைப் பொறுத்தவரை ஸ்பிக் பில்டிங்கிற்கு எதிர்த்தார் போல் இருக்கிற அரசுக்கு சொந்தமான இடத்திலே கட்ட வேண்டும் என்று முடிவு எடுக்கப்பட்டு மாண்புமிகு முதல்வர் அவர்கள் உத்தரவிட்டு, அதற்கானப் பணமும் ஒதுக்கப்பட்டு வேலையும் துவக்கப்பட்டு விட்டது. ஆனால் ஆராய்ச்சி நிலையங்களை அமைப்பதற்கான எதிர்காலத் திட்டத்திற்காகக் கொஞ்சம் கூடுதலான நிலம் தேவை என்று முடிவு எடுத்து இப்போது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன அந்தப் பகுதியிலே எருமைவெட்டியான்பாளையம் என்ற கிராமத்தில் 234.80 ஏக்கர் எடுப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இப்போது மருத்துவப் பல்கலைக் கழகத்தினுடைய பரிந்துரையின்பேரில் அதற்கான ஆய்வு செய்யப்பட்டு வருவாய்த் துறையிலே அதற்கான நடவடிக்கையை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். எனவே வருவாய்த் துறையிலே இருந்து அது திருப்பிக் கிடைத்த பின்பு, அதிலே என்ன நடவடிக்கை எடுக்க முடியும் என்ற முடிவை உங்களுக்குத் தெரிவிக்கலாம்.

TRUTH ALONE TRIUMPHS

1993 ஏப்ரல் 22]

திரு. ஏ. ரவிக்குமார் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேற்கண்டப் பணியானது எவ்வளவு காலத்திற்குள் நிறைவேற்றப்படும்? அதற்கான திட்டத்தின் மதிப்பு எவ்வளவு என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அட்மினிஸ்டிரேடிவ் பிளாக் கட்டுவதற்கான திட்டத்திற்காகத்தான் ஒரு கோடியே 5 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் இந்த ஆராய்ச்சி மையத்தை அமைப்பதற்காக அந்தத் திட்டம் தயாராகவில்லை. ஆனால் எதிர்காலத் திட்டத்திற்காக இடத்தை மட்டும் எடுத்து முடிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கிறது. அந்த நில அளவைத்தான் ஏற்கெனவே நான் சொன்னேன். எனவே அதற்கானத் திட்டங்கள் எதிர் காலத்திலே தான் வகுக்கப்படும். அந்த நிலம் தேவை என்று நாம் நடவடிக்கை எடுத்திருக்கிறோம். முறைப்படி, அந்த விதிமுறைகளின்படி அவர்கள் அதற்கான கால அவகாசம் எவ்வளவு தேவையோ அதைக் கொடுத்து நோட்டீசெல்லாம் கொடுக்க வேண்டும். ஒவ்வொரு நோட்டீசும் ஒவ்வொரு லேண்ட் ஓனருக்கும் கொடுத்து அதற்குப் பின்னாலே அதை அக்குயர் செய்ய வேண்டும். அந்த வகையிலே அவர்கள் நடவடிக்கை எடுத்து, கொடுத்த பிறகு தான் மேலும் அதன் மீது நட வடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 427, திரு. எம். பூராசாமி, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

427—

தரங்கம்பாடி அரசு மருத்துவமனையில் சித்தவைத்தியப் பிரிவு துவங்குதல்.

* 16889—திரு. எம். பூராசாமி :

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க் காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பூம்புகார் தொகுதி, தரங்கம்பாடி அரசு மருத்துவ மனையில் சித்தவைத்தியப் பிரிவு துவங்கப்படுமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது துவங்கப்படும் ?